Crl.Misc.39

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.922/2024**
**Preliminary Register :**
**Police Station :**

**Deposition of witness for : DW1**
**:**

**Name : Malarkodi**
**:**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2025**
(எதிர் மனுதாரர்ஆஜர், எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. மனை எண் 16, படவேட்டம்மன் கோயில் இரண்டாவது தெரு, சோழிங்கநல்லூரில் வசித்து வருகிறேன். மனுதாரர் சான்றாவணம் ஒன்றில் குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள வீடு என்னுடையது தான் என்றால் சரிதான். நான் எனது வீட்டை வாடகைக்கு குத்தகைக்குவிடவில்லை. சிறுசேரியில் உள்ள சிப்காட்டில் கேண்டினில் பணிபுரிந்து வருகிறேன். இந்தியன் வங்கியில் நான் கணக்கு வைத்துள்ளேன். எனது வங்கி

கணக்கில் பணம் போடுவது எடுப்பது அனைத்தும் நான் தான் செய்கிறேன் என்றால் சரிதான்.

2. ரேவதி அவரிடம் வட்டிக்கு பணம் வாங்கி இருந்தேன். அதற்காக காசோலை கொடுத்தேன். அதன்பின்பு சுரேஷ் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆவணம் ஒன்று, குத்தகை ஆவணம் மற்றும் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. நான் தமிழில் தான் கையொப்பம் செய்வேன். நான் தமிழில் தான் கையொப்பம் செய்வேன் என்பதை பற்றி என்னுடைய 313 கேள்வியின் பொழுது கூறினேன் என்றால் கூறினேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனது வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்றால் சரியல்ல. அவர் யார் என்று எனக்கு தெரியாது.

3. என்னுடைய கையெழுத்து இல்லை என்பதை நிரூபணம் செய்ய முடியாது ஹேண்ட் ரைட்டிங் எக்ஸ்போர்ட் ஒபினியன் பெற்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை என்னுடையது தான் என்றால் சரிதான். இவ்வழக்கின் காசோலையை ரேவதி என்பவரிடம் கொடுத்ததை அவர் தவறாக பயன்படுத்தினார் என்பதற்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரரிடம் தான் பணம் பெற்றுக் கொண்டு அதற்காக தான் காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல.

பூர்த்தி செய்யாமல் கையொப்பம் செய்து மட்டும் தான் காசோலை கொடுத்தேன். யார் பெயரிலும் குறிப்பாக எழுதிக் கொடுக்கவில்லை. கையொப்பம் செய்யாமல் பணம் வாங்கிய போது காசோலை கொடுத்தேன்.

4. பணம் வாங்கிய போது காசோலை கொடுத்தேன் என்றாலும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றாலும், தற்போது வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையாகவே காசோலை கொடுக்கவில்லை என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும் அப்படி புகார் அளிக்காததால் நான் கொடுத்த காசோலை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டு அதை திரும்ப செலுத்த வேண்டாம் என்ற காரணத்திற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை :</u> இல்லை

Sd/– M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.